# தீர்க்கதரிசனத்தின் தேவகதைகள்


## பாடம் 17: இரு பெண்களின் கதை

1இராஜாக்கள் 3:16-18

### நடந்த கதை . . .

அரசவையின் விசாரணை அறையில் அப்படியொரு அமைதி; சாலொமோன் ராஜாவையே எல்லாரும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். சிக்கலான அந்த வழக்கை அந்த வாலிப மன்னன் எவ்வாறு தீர்க்கப்போகிறாரெனத் திகைத்துநின்றார்கள்.

இரு தாய்மார்கள் ஒரே அறையில் தங்கியிருந்தார்கள்; இருவருக்கும் ஒரே சமயத்தில் குழந்தை பிறந்தது; இரண்டும் ஆண் குழந்தைகள். இரவுவேளையில், அந்த இருவரில் ஒருத்தி, திரும்பிப் படுத்தபோது தெரியாமல் தன் குழந்தைமேல் புரண்டு விழுந்ததால், அவள் குழந்தை இறந்துபோயிற்று. அதிகாலையில் எழுந்தபோது தன் குழந்தை மரித்திருந்ததைக் கண்டு திகைத்தாள்; அருகே தூங்கிக்கொண்டிருந்த பெண்ணின் குழந்தையை எடுத்துத் தன் பக்கத்தில் போட்டாள்; இறந்த தன் குழந்தையை அங்கு வைத்தாள். பிறகு அடுத்தவள் கண் விழித்ததும், அருகில் இறந்துகிடந்த குழந்தைக்காக ஒப்பாரி வைத்தாள். குழந்தை யாருடையது என்பதில் பிரச்சனை வந்தது.



உயிரோடிருந்த குழந்தைக்காக இருவரும் ராஜாவின்முன் வந்திருந்தார்கள். ‘‘இது என் குழந்தை’’ என்றாள் ஒருத்தி.

‘‘இல்லை, இறந்ததுதான் உன்னுடையது’’ என்றாள் அடுத்தவள்.

உண்மையான தாயை ராஜா கண்டுபிடிப்பாரா? ஒரு காவலனை அழைத்தார் அரசன்; அந்தக் குழந்தையைப் பட்டயத்தால் இரண்டாகப் பிளக்கச் சொன்னார். அவன் தன் பட்டயத்தை உருவினான்; குழந்தையை வைத்திருந்தவளை நோக்கிச் சென்றான். உடனே அந்தக் குழந்தையின் உண்மையான தாய் ஓடிச் சென்று ராஜாவின் காலில் விழுந்தாள்; ‘‘பிள்ளையைக் கொல்ல வேண்டாம்; அதை அவளுக்கே கொடுத்துவிடும்’’ என்றாள். ஆனால் மற்றவளோ, ‘‘அது எனக்கும் வேண்டாம், உனக்கும் வேண்டாம், பிளந்துபோடுங்கள்’’ என்றாள். உண்மையான தாய் யாரென்று சாலொமோனுக்குத் தெரிந்தது.

தீர்க்கதரிசனத்தில் ஸ்திரீயை சபைக்கு அடையாளமாகச் சொல்வார்கள். எரே 6:2. கடைசி நாட்களில் ஏராளமான சபைகள் இருக்கும். ஜீவனுள்ள குமாரன் இருக்கிற மெய்யான, கடைசிக் காலச் சபையை பொய்யான சபைகளிலிருந்து நாம் எவ்வாறு அடையாளங் காணலாம்? சாலொமோனைப் போல, தேவ வார்த்தை எனும் பட்டயத்தை நாம் பயன்படுத்தவேண்டும்.

# ஆராய்ச்சிப் பகுதி

கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

**1. தேவனுடைய உண்மையான சபையை வெளிப்படுத்தல் எவ்வாறு அடையாளப்படுத்துகிறது?**

**வெளிப்படுத்தல் 12:1,2,5.** ஒரு ______________ சூரியனை அணிந்திருந்தாள், அவள் பாதங்களின் கீழே சந்திரனும், அவள் சிரசின்மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன. அவள் ______________________________, பிரசவ வேதனையடைந்து, பிள்ளை பெறும்படி வருத்தப்பட்டு அலறினாள். சகல ஜாதிகளையும் _______________கோலால் ஆளுகைசெய்யும் ஆண் பிள்ளையை அவள் பெற்றாள்; அவளுடைய பிள்ளை தேவனிடத்தில் … அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

**குறிப்பு:** வேதாகமத் தீர்க்கதரிசனத்தில், நல்ல ஸ்திரீ தேவனுடைய சபைக்கு அடையாளமாக இருக்கிறாள். எரேமியா 6:2. வெளி 12இல், தேவனுடைய சிருஷ்டிப்பின் இயற்கை ஒளியான சூரியன், சந்திரன், நட்சத்திரங்களை இந்த ஸ்திரீ அணிந்திருந்ததாகச் சொல்லப்படுகிறது. சபையைக் குறித்து, "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்று இயேசு சொன்னார். மத்தேயு 5:14. இயேசுவின் வெளிச்சத்தை சூரியன் சுட்டிக்காட்டுகிறது. சங்கீதம் 84:11; மல்கியா 4:2. அவளுடைய பாதங்களின் கீழிருந்த சந்திரன் பழைய ஏற்பாட்டின் சாயலையும் நிழலையும் சுட்டிக்காட்டுகிறது. சூரியனின் வெளிச்சத்தை, சந்திரன் பிரதிபலிக்கிறது; அதுபோல, வரவிருந்த மேசியா பற்றிய வெளிச்சத்தை, பலிமுறை பிரதிபலித்தது. கொலோ 2:16,17; எபிரெயர் 10:1. அவள் தலையின்மேலிருந்த 12 நட்சத்திரங்களும் சபையின் தலைமைத்துவத்தை அடையாளப்படுத்துகின்றன. அதாவது, பழைய ஏற்பாட்டில் 12 கோத்திரத்தார்; புதிய ஏற்பாட்டில் 12 அப்போஸ்தலர்கள். சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளப்போகிறவர் இயேசு. சங்கீதம் 2:7–9; வெளிப்படுத்தல் 19:13–16.

**2. 'பெரிய வலுசர்ப்பம்' எது? அது என்ன செய்ய முயன்றது?**

**வெளிப்படுத்தல் 12:9.** ______________ என்றும், ______________ என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் பூமியிலே விழத்தள்ளப்பட்டது.

**வெளிப்படுத்தல் 12:4.** பிரசவவேதனைப்படுகிற அந்த ஸ்திரீ பிள்ளை பெற்றவுடனே, அவளுடைய பிள்ளையைப் ________________போடும்படிக்கு அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது

**குறிப்பு:** சாத்தான்தான் வலுசர்ப்பம். இயேசு பிறந்திருந்த சமயத்தில் அஞ்ஞான ரோம சாம்ராஜ்யத்தின் மூலம் கிரியை செய்தான். ரோமின்கீழ் ஆட்சிசெய்த ஏரோதை ஏவிவிட்டு, இயேசுவைக் கொலைசெய்யும்படி பெத்லகேமில் பிறந்த குழந்தைகளை எல்லாம் கொன்றான். மத்தேயு 2:16

**3. இயேசுவைச் சாத்தான் அழிக்கமுடியாமல் போனதும் என்ன நிகழ்ந்தது?**

**வெளிப்படுத்தல் 12:5.** அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும், ________________________________________.

**குறிப்பு:** இயேசு உயிர்த்தெழுந்தபிறகு, பரலோகத்திற்குச் சென்று, தேவனுடைய சிங்காசனத்தில் உட்கார்ந்தார் (அப் 1:9–11); சாத்தானால் அங்குச் செல்லமுடியாது.

**4. இயேசு பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபிறகு, சாத்தான் திருச்சபையை என்ன செய்தான்?**

**வெளிப்படுத்தல் 12:13.** வலுசர்ப்பமானது தான் பூமியிலே தள்ளப்பட்டதை அறிந்து, அந்த ஆண் பிள்ளையைப்பெற்ற ஸ்திரீயைத் ____________________.

**குறிப்பு:** இயசுவின்மேல் தன்னுடைய பகையைத் தீர்த்துக்கொள்ள முடியாததால், அவருடைய சபையின்மேல் தன் கோபத்தைக் காண்பித்து, அவரைப் புண்படுத்தத் தீர்மானித்தான்.

## 5. அந்த அதிக உபத்திரவக் காலக்கட்டத்தில் அந்த ஸ்திரீ எங்கே சென்றாள்?

**வெளிப்படுத்தல் 12:6.** *ஸ்திரீயானவள் ________________ ஓடிப்போனாள்; அங்கே ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் அவளைப் போஷிப்பதற்காக தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது.*

**குறிப்பு:** ஸ்திரீயானவள் (தேவனுடைய சபை) தன் எதிரிகளிடமிருந்து தப்பித்துக்கொள்ள வனாந்தரத்திற்கு (பூமியின் ஆளில்லா பகுதிகளுக்கு) ஓடிப்போனாள். இது ஊரறிந்த வரலாற்று உண்மை. இருண்ட காலங்களில், மதச் சுதந்தரத்தையும் பாதுகாப்பையும் தேடி, போப்புமார்க்க உபத்திரவத்திலிருந்து தப்ப, குகைகளுக்கும் அமெரிக்காவின் கடற்கரைப் பகுதிகள் உட்பட பூமியின் ஆளில்லா பகுதிகளுக்குத் தப்பியோடினார்கள். 1260 நாட்கள் என்பது (42 மாதங்கள் அல்லது மூன்றரை வருடங்கள் என்றும் வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது). 1260 வருடக் கொடும் உபத்திரவக் காலத்தைச் சுட்டிக்காட்டுகிறது. அப்போது லட்சக்கணக்கானோர் தங்கள் விசுவாசத்தின்நிமித்தம் உயிரிழந்தார்கள். அக்காலக்கட்டத்தில், தேவ சபை உயிரோடு இருந்தாலும், அதிகாரப்பூர்வமான, வெளிப்படையாகத் தெரிகிற ஓர் அமைப்பாக இருக்கவில்லை. ('பல வருட உபத்திரவம்' எனும் சிறப்பு ஆராய்ச்சிப் பகுதியை வாசிக்கவும்).

## 6. தேவனுடைய மெய்யான சபையின் இரண்டு அடையாளங்கள் என்ன?

**வெளிப்படுத்தல் 12:17.** *அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, தேவனுடைய ________________ கைக்கொள்ளுகிறவர்களும், இயேசு கிறிஸ்துவைக் குறித்துச் ________________ உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப் போயிற்று.*

**குறிப்பு:** தம்முடைய மக்கள் அனைவரும் தேவனுடைய மீதமான சபையில் சேரும்படி தேவன் அழைக்கிறார். அந்தச் சபை தேவனுடைய பத்துக்கற்பனைகளைக் கைக்கொள்ளும் (ஓய்வு நாளையும் சேர்த்து). அது இயேசுவின் சாட்சியை உடையதாகவும் இருக்கும். தீர்க்கதரிசன ஆவி அல்லது தீர்க்கதரிசன வரம்தான் அந்த சாட்சி. வெளி 19:10. தம்முடைய கடைசிக்காலச் சபையை 'மீதமான சபை' என்று இயசே அழைக்கிறார். ஏனென்றால், அப்போஸ்தல சபையின் உபதேசமும் குணநலன்களும் அங்குக் காணப்படும். ஒரு துணியை வெட்டிக்கொண்டே வந்தால், அதன் கடைசித் துண்டுதான் 'மீதமானது'. அந்தத் துணியின் அதே குணநலன், அந்தக் கடைசித் துண்டிலும் இருக்கும்.

## 7. இயேசுவின் மேலான அன்பை நாம் எவ்வாறு வெளிப்படுத்த வேண்டுமென்று அவர் கூறுகிறார்?

**யோவான் 14:15.** *நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் ________________________.*

**1யோவான் 5:3.** *நாம் தேவனுடைய ____________________ கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்.*

**குறிப்பு:** முதலில் சொல்லப்பட்ட சம்பவத்தில், உண்மையான தாய் காட்டின மெய்யான அன்பை வைத்து, சாலொமோன் அவளைக் கண்டுபிடிக்க முடிந்தது. அதுபோல, தியாகமான அன்பும், பத்துக் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியும் விருப்பமும்தான் தேவனுடைய மெய்யான சபையை அடையாளங்காட்டும்.

## 8. தேவனுடைய கடைசிக்காலச் சபை பிரசங்கிக்கக்கூடிய முத்தூது எது?

**வெளிப்படுத்தல் 14:7.** *தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் __________________ கொடுக்கும் வேளை வந்தது; வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே __________________.*

**வெளிப்படுத்தல் 14:8.** *வேறொரு தூதன் பின்சென்று, "__________________ மகாநகரம் __________________ விழுந்தது! தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக்கொடுத்தாளே!" என்றான்.*

**வெளிப்படுத்தல் 14:9,10.** *அவர்களுக்குப் பின்னே மூன்றாம் தூதன் வந்து, மிகுந்த சத்தமிட்டு, "__________________ அதின் சொரூபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் __________________ தரித்துக்கொள்ளுகிறவனெவனோ, அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடி(ப்பான்) என்றான்.*

**குறிப்பு:** தூதர்கள் சொன்ன இந்த மூன்று தூதுகளும் இயேசுவின் வருகைக்குமுன் தேவனுடைய சபை பிரசங்கிக்கும் மூன்று அவசரச் செய்திகள் ஆகும்.

## 9. தேவனுடைய சபை இந்தச் செய்திகளை யாருக்குப் பிரசங்கிக்கும்?

**வெளிப்படுத்தல் 14:6** *அவன் பூமியில் வாசம்பண்ணுகிற ____________ ________________, கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத் தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்(தான்).*

**குறிப்பு:** தேவனுடைய கடைசிக்காலச் சபையானது உன்னதமான இந்த மூன்று தூதுகளையும் பூமியிலுள்ள ஒவ்வொரு தேசத்திலும் பிரசங்கிக்கும்.

## 10. தேவனுடைய கடைசிக்காலச் சபையை நாம் சரியாகக் கண்டுபிடிக்கும்படி தேவன் தம் வார்த்தையில் என்ன குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார்?

**வெளிப்படுத்தல் 12:17.** *அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங் கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசு கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததி யான ____________________ யுத்தம்பண்ணப் போயிற்று.*

**அ.** *1798இல் வனாந்தரத்திலிருந்து தோன்றியபிறகு, அது வெளிப்படையாகத் தன் கிரியைகளை நடப்பிக்கும். (வெளிப்படுத்தல் 12:6;13-17).*

**ஆ.** *அப்போஸ்தலர்கள் போதித்த அதே சத்தியங்களைப் போதிக்கும்; அதன் போத னைகளெல்லாம் வேதாகமத்திற்கு ஒத்திருக்கும். (வெளிப்படுத்தல் 12:17).*

**இ.** *வேதாகமத்தின் ஓய்வுநாள் உட்பட பத்துக்கற்பனைகளையும் கைக்கொள்ளும். (வெளிப்படுத்தல் 12:17).*

**ஈ.** *அது தீர்க்கதரிசனத்தின் ஆவியைப் பெற்றிருக்கும். (வெளிப்படுத்தல் 12:17; 19:10).*

**உ.** *தேவனுடைய முத்தூதுகளை அது உரத்த சத்தத்தோடே அறிவிக்கும். (வெளிப்படுத்தல் 14:6-14).*

**ஊ.** *அது உலகளாவிய இயக்கமாக இருக்கும். (வெளிப்படுத்தல் 14:6).*

**எ.** *இயேசுவினால்மாத்திரமே இரட்சிப்பு உண்டு என்கிற சுவிசேஷத்தை அது பிரசங்கிக்கும். (வெளிப்படுத்தல் 14:6).*

**குறிப்பு:** நல்ல கிறிஸ்தவர்கள் பலர் மேலே சொல்லப்பட்ட ஏழு அம்சங்களும் காணப்படாத சபையில் அங்கத்தினர்களாக உள்ளனர். ஆனால் தேவன் தம் உண்மைப் பிள்ளைகள் சேரும்படி அழைக் கும் சபையானது, அந்தச் சபைகளில் ஒன்றாக இருக்கமுடியாது. ஏனென்றால் அவருடைய கடைசிக்கால சபையானது அனைத்து ஏழு அம்சங்களையும் பெற்றிருக்கவேண்டும்.

## 11. இந்த ஏழு தீர்க்கதரிசன அடையாளங்களையும் இயேசு கொடுத்துவிட்டு, 'போய், என் சபை எதுவெனக் கண்டுபிடியுங்கள்' என்று இயேசு சொல் கிறார். நீங்கள் நிச்சயம் கண்டுகொள்ளலாம் என்பதற்கு அவர் தரும் வாக்குத்தத்தம் என்ன?

**லூக்கா 11:9.** *தேடுங்கள், அப்பொழுது ________________________.*

## 12. இந்த ஏழு அடையாளங்களும் காணப்படுகிற சபை அமைப்புகள் எத்தனை உள்ளன?

**எபேசியர் 4:5.** *ஒரே கர்த்தரும், ________ ________________, ஒரே ஆவியும் உண்டு.*

**குறிப்பு:** உலகத்தில் ஒரே ஒரு சபைதான் இந்த அம்சங்கள் அனைத்தையும் பெற்றிருக்கிறது. அது செவந்த்–டே அட்வென்ட்டிஸ்ட் சபை. இந்தப் பாடங்களை உங்களுக்கு வழங்கிக் கொண்டிருப் பதும் அந்தச் சபைதான். இன்று வெளி 14:6–12 இன் முத்தூதுகளை உலகமெங்கும் அது பிரசங் கித்துக் கொண்டிருக்கிறது. லட்சக்கணக்கானோர் அந்தச் செய்தியை ஏற்றுக்கொள்கிறார்கள்.

## 13. பல சபை அமைப்புகள் தங்களைக் கிறிஸ்தவர்களென்று அழைத்தாலும் அவர்கள் தேவனுடைய மெய்யான சபையாகிவிட முடியுமா?

**ஏசாயா 4:1.** *அந்நாளில் ஏழு ஸ்திரீகள் ஒரே புருஷனைப் பிடித்து: நாங்கள் எங்கள் சொந்த ____________________ புசித்து, எங்கள் சொந்த ___________________ உடுப்போம்; எங்கள் நிந்தை நீங்கும்படிக்கு உன்பேர்மாத்திரமே எங்கள்மேல் விளங்கட்டும் என்பார்கள்.*

**குறிப்பு:** அப்பமானது தேவ வார்த்தைக்கும் (யோவான் 6:35, 51, 52, 63), அங்கியானது தேவ நீதிக்கும் (வெளி 19:18) அடையாளமாக இருக்கின்றன. இந்தத் தீர்க்கதரிசனத்தில் சொல்லப்படும் ஏழு பெண்களும் தங்கள் அப்பத்தையும் (சத்தியம் குறித்த கருத்து) தங்கள் சொந்த வஸ்திரத்தையும் (நீதி) வைத்திருந்தார்கள். கிறிஸ்துவின் கறைதிரையற்ற வஸ்திரத்தை வாங்க அவர்கள் விரும்பவில்லை. 'நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை' என்று வேதாகமம் சொல்வதால், இயேசுவின் நாமத்தைமாத்திரம் தரித்துக்கொள்ள அவர்கள் விரும்பியிருக்கலாம். அப்போஸ்தலர் 4:12.

## 14. தேவனுடைய கடைசிக்கால மெய்யான சபையை ஒருவர் கண்டுபிடித்ததும், அந்தச் சபையில் அங்கத்தினராக வேண்டியது அவசியமா?

**அப்போஸ்தலர் 2:47.** *இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் ___________________ _______________________ வந்தார்.*

**குறிப்பு:** ஆம், தேவனுடைய கடைசிக்காலச் சபையில் அங்கத்தினர்களாக இருக்கவேண்டியது கட்டாயம். அதுபற்றி தேவன் தெளிவாகச் சொல்லியுள்ளதை வாசியுங்கள்.

- ◊ நாம் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டிருக்கிறோம். கொலோ 3:15.
- ◊ அந்தச் சரீரம் கிறிஸ்துவே. கொலோ 1:18.
- ◊ ஒரே ஞானஸ்நானத்திற்குள்ளாக அதில் சேருகிறோம். 1கொரி 12:13.

நோவாவின் நாட்களில் பேழைக்குள் செல்வது கட்டாயமாக இருந்ததுபோல, இன்று தேவ சபையில் சேருவதும் அவசியமாகும். 'நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்' என்று ஆண்டவர் சொல்கிறார். ஆதியாகம் 7:1.

## 15. நோவாவின் நாட்களில் மக்கள் தப்பித்துக்கொள்ள என்னென்ன வழி இருந்தது?

**எபிரெயர் 11:7.** *விசுவாசத்தினாலே நோவா … தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் ________________ உண்டுபண்ணினான்*

**குறிப்பு:** தம்முடைய இரண்டாம் வருகைக்குச் சற்றுமுன் இருக்கும் காலம் நோவாவின் காலத்தைபோல் இருக்குமென்று இயேசு சொல்கிறார். லூக்கா 17:26. அவர்கள் தப்ப, நோவாவின் பேழைமாத்திரமே அப்போது இருந்தது; அதுபோல்தான் இப்போதும் கடைசிக்காலச் சபை இருக்கிறது.

## 16. பிற சபைகளிலும் உண்மையான கிறிஸ்தவர்கள் பலர் இருக்கிறார்கள்; ஆனால் ஒன்றே ஒன்றுதான் தேவனுடைய மீதமான சபை. எனவே, இந்த உண்மைக் கிறிஸ்தவர்களின் நிலை என்னவாகும்?

**யோவான் 10:16.** *இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் ___________________ வேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் ___________________, அப்பொழுது __________ மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்.*

**வெளிப்படுத்தல் 18:2,4.** *மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது! … என் _____________, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு _______________ _______________.*

**குறிப்பு:** உண்மையும், நேர்மையுமான தம்முடைய பிள்ளைகள் பாபிலோனைவிட்டு வெளியே வரும்படி இயேசு அழைக்கிறார். அவர்கள் அவருடைய சத்தத்தைக் கேட்டு, கீழ்ப்படிந்து, அவருடைய ஒரே மெய்யான, கடைசிக்காலச் சபைக்குள் செல்வார்கள்.

# நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

தேவனுடைய மெய்யான சபையில் சேர்ந்து தப்பித்துக்கொள்ளும்படி, இயேசு இன்று உங்களை அழைக்கிறார். நீங்கள் அவருக்கு விலையேறப்பெற்றவர்கள். அவருடைய அழைப்புக்கு இப்போதே செவிகொடுப்பீர்களா?

பதில்: ____________________

# துணைப்பகுதி

***மேலும் படிப்பதற்கான கூடுதல் தகவல்கள் இந்தப் பகுதியில் உள்ளன.***

## உபத்திரவக்காலம்

1260 வருட உபத்திரவக்காலம்பற்றி வேதாகமத்தில் அடிக்கடிச் சொல்லப்பட்டுள்ளது. ஏனென்றால், தேவ மக்களுக்கு ஏற்படவிருந்த மிக மோசமான அனுபவம் அது. மத்தேயு 24:21. 1260 நாட்கள், 42 மாதங்கள், மூன்று காலங்களும் அரைக்காலமும், அல்லது மூன்றரை வருடங்கள் என்றெல்லாம் அந்தக் காலக்கட்டம் குறிப்பிடப் பட்டுள்ளது. வெளிப்படுத்தல் 12:6,14; 13:5; தானி 7:25. யூதகாலண்டரின் வருடத்திற்கு 360 நாட்கள் என்கிற கணக்கின்படி பார்த்தால், மூன்று காலக்குறிப்புகளுமே 1260 வருடங்களைச் சுட்டிக்காட்டுகின்றன. ஒரு தீர்க்க தரிசன நாளானது ஒரு வருடத்திற்குச் சமம். எசேக்கியேல் 4:6; எண்ணாகமம் 14:34.

பாப்புமார்க்க வல்லமைதான் 1260 வருடங்கள் உபத்திரவப்படுத்தியது என்பதை வரலாறு தெளிவாகச் சொல் கிறது. கி.பி.538 இல் அந்தக் காலக்கட்டம் ஆரம்பித்தது; அப்போது ரோமப் பேரரசர் ஜஸ்டினியனின் கட்டளைப்படி கிறிஸ்தவ உலகின் உச்ச அதிகாரம் போப்பாண்டவரிடம் சென்றது. எல்லாச் சபைகளுக்கும் ரோம் பிஷப்தான் தலைவர் என்று கட்டளையில் மன்னர் தெரிவித்திருந்தார். ஜஸ்டியனியன் சட்டத்தொகுப்பில் ஒன்றாக, சாம்ராஜ் யத்தின் அடிப்படைச் சட்டமாக அந்தக் கட்டளை மாறியிருந்தது. இந்தக் காலக்கட்டம் 1798 இல் முடிவடைந்தது; அப்போதிருந்த போப்பை பிரெஞ்சுத் தளபதி அலெக்ஸாண்டர் பெர்தியர் சிறைபிடித்தார்.

## மூன்று முக்கியக் கருத்துகள்

தேவ பிள்ளைகளுக்கு மிகவும் முக்கியமான மூன்று உண்மைகள் வெளிப்படுத்தல் 12:10–12 இல் சொல்லப் பட்டுள்ளன. அவை என்னவென்றால்:

1. சகோதரரைக் குற்றஞ்சாட்டுகிறவனான சாத்தானைச் சிலுவையில் இயேசு தோற்கடித்தார்.
2. இயேசுவின் இரத்தத்தாலும், அவரைப்பற்றிய சாட்சியாலும் நாம் அனைவருமே அவனைத் தோற்கடிக்க முடியும்.
3. தனக்குக் கொஞ்சக்காலமே இருக்கிறதென்பதால் சாத்தான் மிகவும் கோபத்தோடு இருக்கிறான். அவன் நம்மேல் மிகுந்த கசப்போடிருக்கும் சத்துரு.

சாத்தானை ஜெயித்த இயேசு தம் ஈடுஇணையற்ற வல்லமையை நமக்கு ஓர் ஈவாகக் கொடுக்கிறார். இயேசு வின் வல்லமை நம் வாழ்க்கையில் கிரியைசெய்தால் நாம் தோற்கவேமாட்டோம். சாத்தானின் கோபம் நம்மை எதுவுமே செய்யமுடியாது. அவன் தோற்கடிக்கப்பட்ட எதிரி. பரலோகத்தில் நடைபெற்ற யுத்தத்தில் தோற்கடிக்கப் பட்டு, அவன் கீழே தள்ளப்பட்டான். சிலுவையில் இயேசுவிடம் அவன் தோல்வியடைந்து, தன் அதிகாரத்தை இழந்துவிட்டான். நியாயத்தீர்ப்பின்போதும் சட்டப்பிரகாரமாக அவன் தோற்கப்போகிறான்; தேவனுடைய பரிசுத்த நகரத்தைத் தாக்கும்போதும் அவனுக்குத் தோல்விதான். இறுதியாக, பூமியிலிருந்தே அறுப்புண்டு, அக்கினிக் கடலில் சாம்பலாகப் போவதிலும் அவனுக்குத் தோல்விதான். என்னையும் உங்களையும் அழிப்பதாக அவன் வன்மம் வைத்தாலும், அதிலும் தோற்பான் என்று இயேசு வாக்குக்கொடுத்திருப்பது அனைத்திலும் அற்புதம். இயேசு நமக்குத் தரும் நம்பிக்கைதான் எத்துணை பெரியது!

**LMN Kakkum Karangal**
35, Chethupakkam
Thamarai Pakkam Post,
Thiruvallur, Chennai 601103
Tel: +91-9444841268
lmnkakkumkarangal@gmail.com